Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 339 தபாற் பெட்டி எண்: 49

மலர் 9 யாழ்ப்பாணம். பிலவ சித்திரை 28 ஆம் நாள் துல்கஃதா 24 (10-5-61) புதன்கிழமை இதழ் 73

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

33

இன்பம் தரும் 303 பத்திகளை

3003

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

"மொழிபிரச்னைக்குதீர்வு காணமுயலுகிறேம்"

பிரதமர் சிறிமா அறிவிப்பு

'இது ஒரு தேசிய பிரச்னையாகும்'

கொழும்பு, புதன்

"மொழி விஷயமாக எழுந்துள்ள இப்போதைய நிலைமையை நானும் எனது மந்திரிசபையும் பரிசீலனை செய்வதுடன், இந்தத் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவும் முயற்சி செய்து வருகிறேம்."

என்றிவ்வாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் அறிவித்தார்.

நேற்றுக் காலை கூடிய கட்சிக் கூட்டத்துக்கு சபை முதல்வர் திரு. ஸி. பி. டி. சில்வா தலைமை வகித்தார். அவசரகாலநிலை பற்றி சென்ற புதன் கிழமை நடந்த விவாதம் குறித்தும் பரிசீலனை செய்தனர்.

எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்திபெற்றவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதுபற்றியும் ஆலோசனை நடைபெற்றது.

'யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது: நடவடிக்கை எடுக்கப்படும்'

தோட்ட வேலைநிறுத்தம் தீர்த்துவைக்கப்பட்டது

கொழும்பு, புதன்

தூண்டுதல் குற்றச்சாட்டின் பேரில் "யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்மீது வழக்குதாக்கல் செய்யப்படும்"என பாதுகாப்பு–வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக்காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

தோட்ட வேலைநிறுத்தம் தீர்க்கப்பட்டது

"அவிசாவளையைச் சேர்ந்த அப்பாஸி தோட்டத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவரது அறிக்கை கூறுகிறது.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், தோட்டங்களிலும் பொதுவாக அமைதி நிலவுகிறது. பாதுகாப்புப் படைகள் சகல இடங்களிலும் ரோந்து புரிகின்றன. யாழ்ப்பாணத்தில் தூண்டுதல் குற்றச்சாட்டின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர்மீது வழக்குத் தொடரப்படும். அப்பாஸி தோட்டத்தில் வேலைநிறுத்தம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிக்கை மேலும் கூறியது.

அநுராதபுரத்தில் விமானதளம் அங்குரார்ப்பணம்

ஜூன் 1–ம் தேதி முதல் போக்குவரத்து ஆரம்பமாகும்

கொழும்பு, செவ்வாய்

இம்மாதம் 20 ம் திகதி அநுராதபுரத்தில் புதிய விமானத்தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். அன்றைய தினம் பிரதமமந்திரியுட்பட பலமந்திரிகளை ஏற்றிக்கொண்டு முதலாவது விமானம் கொழும்பிலிருந்து அநுராதபுரம் வந்திறங்கும்.

ஜூன் 1-ம் தேதி முதல் அநுராதபுரம் வழியாக திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு விமான சேவை ஆரம்பமாகும்.

ஒவ்வொரு சனிக்கிழமை காலையும் கொழும்பிலிருந்து புறப்படும் விமானம் அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குப் புறப்படும்.

வத்தை கவிழ்ந்ததினால் புகையிலை சேதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலைச் சங்கத்தின் 300 புகையிலைச் சிப்பங்களை யாழ்ப்பாணத்திலிருந்து தூத்துக்குடிக்கு ஏற்றிச் சென்ற வத்தை ஒன்று துறைமுகத்திலிருந்து 2 1/2 மைலுக்கப்பால் கடலுள் கவிழ்ந்ததினால் புகையிலை முற்றிலும் சேதமாகியது.

இச்சேதத்தினால் ரூ. 50,000 நஷ்டமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்டர் நல்லையாவின் இரு கேள்விகள்

கொழும்பு, செவ்வாய்

சென்டர் ஜி. நல்லையா, பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயகாவிடம் கீழ்க்கண்ட கேள்விகளை சென்டில் கேட்கவிருக்கிறார்.

1. அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதாக்கப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவரின் பெயரும் விலாசமும்.

2. கைதாக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவரின் பெயரும் விலாசமும்.

வரதட்சணை தடை அங்கீகாரம்

புதுடில்லி, மே 9

இந்தியப் பார்லிமெண்டின் இரு சபைகளும் சேர்ந்த கலப்புக் கூட்டம் வரதட்சணைத் தடைமசோதாவுக்கு இன்று அங்கீகாரம் அளித்தது. அன்பளிப்புக்கு விதிவிலக்களிக்கவும் அது சம்மதம் தெரிவித்தது.

விவசாய விஸ்தரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வலிகாமம் கிழக்குப் பகுதிக்கான விவசாய விஸ்தரிப்பு நிலையத்துக்கான மத்திய அலுவலகமொன்றைச் சமீபத்தில் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. கே. சின்னையா புத்தூரில் திறந்துவைத்தார்.

இலங்கை–இந்திய ஒப்பந்தங்கள்

பிரதமர் நியமித்த கமிட்டி ஆராயும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கை–இந்திய பிரச்சினை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பிரதமமந்திரி நியமித்த மூன்று அங்கத்தவர்களைக்கொண்ட கமிட்டி நேற்று முதல்தடவையாகக் கூடி ஆராய்ந்தது.

இக்கமிட்டியில் திரு. எச் ஈ. தென்னக்கூன், திரு. என்.கியூடயஸ், திரு ஸி. பி. குமாரசிங்கா ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

இலங்கை–இந்தியர்பிரச்சினை சம்பந்தமாகப் பொதுவான விஷயங்கள்பற்றி கமிட்டி ஆராய்ந்தது. இவ்விஷயமாகப் பல்வேறு அரசாங்க இலாகாக்களிலிருந்து புள்ளிவிபரம் பற்றிய தகவல்களைக் கூறுவதென்று கமிட்டி முடிவுசெய்தது.

பிரதமமந்திரியிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னர் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் முன்னர் செய்துகொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களையும் இக்கமிட்டி ஆராயுமென்று தெரிகிறது.

ரேடியோ ஆராய்ச்சி நிலையம்

கொழும்பு, செவ்வாய்

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம், இலங்கையில் பிரிட்டிஷ் உதவியுடன் ரேடியோ விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.

பண்டாரநாயகா கொலை வழக்கு விசாரணை

நீதிமன்றத்தில் ஏராள கூட்டம்

கொழும்பு, புதன்

பண்டாரநாயக்கா கொலை வழக்கு விசாரணையில், நேற்று நீதியரசர் திரு. டி. எஸ். பர்னாண்டோ, முதல் எதிரியான புத்தரகித்த தேரோ மீதுள்ள வழக்கைப்பற்றி ஜூரர்களுக்கு மேலும் எடுத்து விளக்கினர்.

நீதிமன்றத்தில் ஏராளமான கூட்டம். வெளித்தாழ்வாரங்களிலும் ஆசனங்கள் போட்டு மக்கள் உட்கார வசதி செய்திருந்தனர். வெளிநாட்டு ஸ்தானிகர்களும் அவர்களது மனைவிமாரும் கோர்ட்டுக்கு வந்து விசாரணைகளைக் கவனித்தனர்.

கண்டிப்பகுதியில்

1200 ஏக்கர் நிலத்தில் சின்ன வெங்காயம்

கண்டி, திங்கள்

கண்டிமாவட்டத்தில் 1200 ஏக்கர் நிலத்தில் சின்னவெங்காயம் பயிரிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகின்றன. நுவரேலியா மாவட்டத்தில் பம்பாய் வெங்காயம் பயிரிடுவதற்கான ஒழுங்குகளை விரைவில் விவசாய இலாகா மேற்கொள்ளும் என்று காணி அபிவிருத்தி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார மந்திரி திரு. சி. பி. டி' சில்வா தலத்துஓயா மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சி. பி. டி' சில்வா மேலும் கூறியதாவது:–

கண்டி மாவட்டத்தில் ஏற்கனவே 600 ஏக்கர் நிலத்தில் சின்ன வெங்காயம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. மிகுதி 600 ஏக்கர் நிலத்திலும் விரைவில் சின்ன வெங்காயம் பயிரிடப்படும். இதுவரை காலமும் சின்னவெங்காயம் யாழ்ப்பாணத்தில்தான் செய்கைபண்ணப்பட்டுவந்தது. மழை குறைவான காலத்தில் சின்னவெங்காயம் பயிரிடப்படவேண்டும். நமது விவசாயிகள் ஜப்பானிய முறையில் நெற்செய்கையிலீடுபட்டால் அரிசி இறக்குமதியையே நிறுத்திவிடலாம்.

'ஆண்டி'முறை கமக்காரர்களின் நலனை முன்னிட்டு நெற்காணிச்சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டியுள்ளது. இம்மாத முடிவுக்குள் சட்டத்தைத் திருத்திவிடலாமென நம்புகிறேன்.

உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினை பேசுகையில் தங்களை ஆட்சிக்கு அனுப்பிய பொதுமக்களுக்கு அரசாங்கம் தனதுகடமையைச் செய்யவேண்டியுள்ளதென்றார்.

மணிவாக்கு

மற்றவனுக்கு நீ நல்லவனாக இருக்கும் போது, உனக்கே நீ நல்லவனாகி விடுகின்றாய்.

பெஞ்சமின் பிராங்ளின்

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு சித்திரை மீ 28 வ (10-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

சிமிந்தி விலையை குறைக்க வேண்டும்

காங்கேசன் துறையிலுள்ள சிமிந்தித் தொழிற்சாலை நல்ல லாபத்தில் நடந்து வருவது மகிழ்ச்சியளிப்பதும் பாராட்டத்தக்கதுமாகும். வருஷத்தில் சராசரி 40 லட்ச ரூபாய் லாபம் கிடைப்பதாக, அத்தொழிற் சாலை அதிகாரி தெரிவிக்கின்றார். இதற்குப் போட்ட முதல் சுமார் மூன்று கோடி ரூபாய் தான். அத்துடன் ஒப்பிடுகையில், இந்த லாப விகிதம் அதிகமென்றே கூறவேண்டும்.

அரசாங்கம் இவ்விதத் தொழிற்சாலைகளை பொது மக்கள் பணத்தில் அமைக்கும் முக்கிய நோக்கம் பொது மக்களுக்கு நன்மையாக இருக்க வேண்டுமென்பதே. லாபம் பெறவேண்டுமென்பதன்று. இதைக் கவனிக்கையில் வீடுகள் கட்ட மிக முக்கியமான தான சிமிந்தியை கூடுமானவரை மக்களுக்கு மலிவாகக் கிடைக்கச்செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தொன் ஒன்றுக்கு இந்த கார்ப்பரேஷன் சராசரி ரூ 50 லாபம் பெறுகிறதாம். இந்த லாபப் பணத்தை சிமிந்தியின் விலையைக் குறைக்கப் பயன்படுத்த வேண்டியதே முறை. அப்படிச் செய்வதைப் பொதுமக்கள் வரவேற்பர். இதனால் வீடுகள் கட்டுவதற்காகும் செலவும் குறையும். அதிக வீடுகள் கட்ட உதவியாகவும் இருக்கும்.

ஆனால் சிமிந்தி விலையை இங்கிலையில் குறைப்பதற்கில்லை என்பதற்கு கார்ப்பரேஷன் அதிகாரி ஒரு முக்கிய காரணம் கூறுகிறார். இப்போது நாட்டுக்குத் தேவையான சிமிந்தியில் நான்கில்ஒருபங்கே இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகிறதாம். மற்ற மூன்று பங்கும் இறக்குமதியாகவேண்டியுள்ளது. இறக்குமதியாகும் சிமிந்திக்கு தொன் ஒன்றுக்கு 40 ரூபாய் தீர்வை விதிக்கப்படுகிறது. இத்தீர்வை காரணமாகவே இறக்குமதி சிமிந்தியின் விலை அதிகமாக உள்ளது. அதற்கு சமமாக காங்கேசன் சிமிந்தியின் விலையையும் உயர்த்த வேண்டியிருப்பதாயும் இன்றேல் சில வியாபாரிகள் காங்கேசன் சிமிந்தியைப் பதுக்கிக் கொள்ளை லாபம் அடிப்பாரென்றும் காரணம் கூறுகிறார் அதிகாரி.

ஆரம்பத்தில்நமதுஉள்நாட்டு தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கக் காப்புத்தீர்வை அவசியமே. இன்றேல் நமது கைத்தொழில்கள் போட்டி காரணமாகத் தலைதூக்க முடியாது போகும். ஆனால் காங்கேசன் சிமிந்தி தொழிற்சாலை லாபகரமாக நடப்பதால் இனி காப்புத் தீர்வையைக் குறைக்க நியாயமுண்டு. அவசியமின்றியோ, அளவுக்கு மிஞ்சியோ கரப்புத் தீர்வை விதிப்பது பொது மக்களை வீணாகப் பாதிக்கும்.

பணநிலைகாரணமாகத் தீர்வையைக் குறைக்க அரசாங்கம் இச்சமயம் தயாராக இருக்குமோ என்பது சந்தேகம். என்றாலும் பொது நன்மையை முன்னிட்டு, சிமிந்தி விலையைக் குறைக்க எல்லா முயற்சியையும் அத்தொழிற் சாலை நிர்வாகிகளுடன் கலந்து பேசி அரசாங்கம் செய்ய வேண்டும். இலங்கை தனக்கான சிமிந்தியனைத்தையும் இங்கேயே உற்பத்தி செய்தால், நமது செல்வம் வீணாக வெளியேறுமல் தடுப்பதுடன் இங்கு பலருக்கும் வேலை கிடைக்கும். ஆகவே சிமிந்தி உற்பத்தியை மேலும் பெருக்க இனி அரசாங்கம் முன்னிலும் அதிக ஊக்கம் எடுக்கவேண்டும்.

"இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் உறவு பலப்படும்"

ஸ்ரீபாலியில் தாகூர்நூற்றாண்டுவிழா

ஹொறணை, செவ்வாய்

"ரவீந்திரநாத் தாகூர் பற்றிய சினிமாப்படமொன்றை கொழும்பில் திரையிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுவருகின்றது" என்று இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் ஹொறணை ஸ்ரீபாலியில் தாகூர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை மேற்று ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இதைவிட வேறு சிறந்த இடமில்லையாதலால் அத்திரைப்படத்தின் ஒரு பிரதியை ஸ்ரீபாலிக்கு வழங்குவதற்கு விரும்புகிறேன்" என்று திரு. கபூர் கூறினர்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட ஸ்ரீபாலி மாணவர்கள் பாடசாலை மைதானத்திலிருந்து தாகூரின் பாடல்களைப் பாடியபடி அருந்ததி மண்டபத்துக்கு ஊர்வலமாகச் சென்றனர். இந்த மண்டபத்தில் ஸ்ரீபாலி ஸ்தாபகரும் தலைவருமான திரு. ஏ. வில்மட் பெரேராவின் தலைமையில் தாகூர் நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது.

"இந்தியாவுக்குமட்டும் உரித்தானதல்ல தாகூரின் போதனைகள். உலகம் முழுவதையும் தன்பால் இழுத்த இந்தியாவின் தவப்புதல்வர் ஒருவரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை இத்தியத் தாயின் ஒரு புதல்வன் என்றவகையில் ஆரம்பித்துவைப்பதில் பெரும் மகிழ்ச்சிகொள்கிறேன்" என்று திரு. கபூர் கூறினர்.

தாகூரின் போதனைகளையும் எழுத்தையும் ஸ்ரீபாலிக்கு அதிகம் தெரியுமாகையால் கவிஞரின் வாழ்க்கை பற்றி நீண்ட நேரம் பேசுவதற்குத் தாம் விரும்பவில்லையென்று ஹைகமிஷனர் தெரிவித்தார்.

திரு. வில்மட் பெரேரா பேசுகையில் ஹொறணைக்குத் தாகூர் விஜயம் செய்ததையும் ஸ்ரீபாலிக்கு அஸ்திவாரமிட்டு ஸ்ரீபாலி என்று பெயர் சூட்டியதையும் எடுத்துரைத்தார். அப்பொழுதுதான் கண்டிய நடனத்தைத் தாகூர் முதல் தடவையாகக் காணும் சந்தர்ப்பம் கிடைத்ததென்றும் ஒரு கண்டிய நடனக் காரரையும் மத்தளகாரரையும் சாந்திநிகேதனுக்கு அவர் அழைத்தாரென்றும் திரு. வில்மட் பெரேரா கூறினர்.

சாந்திநிகேதனுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த சமயம் தாகூர் இலங்கைக்கு வந்திருந்தாரென்றும் இந்த நாடு 30,000 ரூபாய்க்கு ஒரு 'செக்' வழங்கியதென்றும் திரு. வில்மட் பெரேரா குறிப்பிட்டார்.

தாகூரின் போதனைகளைப் பின்பற்றி நடக்க முயற்சி செய்யவேண்டுமென்று கூறிய திரு. வில்மட் பெரேரா அவ்விதம் நடந்தால் வாழ்க்கையில் தவறு ஏற்படாததுடன் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் அதிக உறவு ஏற்படுமென்றும் சொன்னார்.

தேசத் துரோகிகளை தண்டிக்கும்புதுமசோதா

ஜம்மு, மே 7

சமீபத்தில் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட கிரிமினல் சட்ட (திருத்த) மசோதாவின் ஷரத்துக்கள் ஜம்மு காஷ்மீருக்கு அமுல் செய்யப்படாதது வியக்கத்தக்கதாக இருப்பதாக ஜம்மு பிரஜா பரிஷத் தலைவர் ஓர் அறிக்கையில் கண்டித்தார்.

ராஜயத்தின் பெரும்பகுதி பாகிஸ்தான் ஆதிக்கத்தில் இருப்பதால் அங்கு மசோதாவை அமுல் செய்யும் அவசியம் அதிகம் என்று அவர் குறிப்பிட்டார்.

திருவள்ளுவர் திருநாள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

திருவள்ளுவர் திருநாள் வைகாசி அனுடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடும் யாழ்ப்பாணத்திலுள்ள பல பொதுநிலையங்களும் கல்விஸ்தாபனங்களும் இவ்வாண்டு அத்தினத்தை மிக அமைதியான முறையில் கொண்டாடுவதென முடிவு செய்திருக்கின்றன.

இத்தினத்தை முன்னிட்டு திருக்குறள் மனனப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பகிரங்கக்கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுவது வழக்கமாக இருந்தபோதிலும் இவ்வாண்டு வைகாசி அனுடத்தில் திருவள்ளுவர் திருநாள் வழிபாட்டோடு முடித்து விடக்கூடிய ஏற்பாடுகளே நடைபெறுவதாகத் தெரிகிறது.

'பெண்கள் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும்'

வரதட்சணை ஒழிப்புக்கு ஆசார்ய கிருபளானி யோசனை

புதுடில்லி, மே 9

வரதட்சணைக்குத் தடை மசோதா மீது இந்திய பார்லிமெண்டின் இரு சபைகளின் கூட்டுக்கூட்டத்தில் இன்று தொடர்ந்து விவாதம் நடைபெற்றது.

இன்றைய விவாதத்தில் ஆச்சார்ய கிருபளானி பேசுகையில் வரதட்சணை முறையை சட்டத்தினால் தடை செய்ய நடவடிக்கை எடுக்க முயற்சித்தால் அதை சிலர் தவறான முறையில் பயன்படுத்தக் கூடுமென்றார்.

அன்பளிப்புக் கொடுப்பதற்கு மசோதா விதி விலக்களிக்க வேண்டுமென்று திரு. கிருபளானி கேட்டுக்கொண்டார். "வரதட்சணையை ஒழித்துக் கட்ட பெண்கள் எல்லோரும் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்" என்று திரு கிருபளானி யோசனை கூறினர்.

வரதட்சணைக்கு சட்டத்தின் மூலம் தடைபோடுவது முற்போக்கான செயலல்ல என்று ஜனசங்கக் கட்சி அங்கத்தவர் ஒருவர் கூறினர்.

இராமநாதன் பல்கலைக் கழகம் உருவாகும்

சாகிராவுக்கும் பல்கலைக் கழக அந்தஸ்து

கொழும்பு, செவ்வாய்

கல்வித்துறையில் இந்துக்களின் தேவையையும் முஸ்லிம்களின் தேவையையும் நிறைவேற்றும் உத்தேசத்துடன் இராமநாதன் பல்கலைக் கழகமும் சாகிரா பல்கலைக் கழகமும் நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சுன்னகம் இராமநாதன் கல்லூரியும் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியும் ஒன்றுக இணைக்கப்பட்டு இராமநாதன் பல்கலைக்கழகமாக்கப் படும். கொழும்பு சாகிராக்கல்லூரி சாகிரா பல்கலைக்கழகமாக்கப்படும்.

வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழகங்களுக்குள்ள அந்தஸ்து இராமநாதன் பல்கலைக்கழகத்துக்கும் சாகிரா பல்கலைக் கழகத்துக்கும் அளிக்கப்படுமென்று தெரிகிறது. காலஞ்சென்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் நாட்டுக்குச் செய்த சேவையின் ஞாபகார்த்தமாக இராமநாதன் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்துள்ளதாம்.

இராமநாதன் கல்லூரியின் அதிபர் திரு. எஸ். நடேசனும் சாகிராக்கல்லூரி அதிபர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸும் தங்கள் கல்லூரிகளைப் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தக்கூடிய சாத்தியங்கள்பற்றி முன்னரே அரசாங்கத்துக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

இக்கல்லூரிகளைப் பல்கலைக் கழகங்களாக்குவதற்கு கல்வி மந்திரி அங்கீகரித்துவிட்டாரென்று தெரியவருகிறது.

ஸ்தலஸ்தாபனத்தின் கணக்கெடுப்பு

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன இயக்கங்களிலும் ஒரு விரிவான கணக்கெடுப்பை நடத்த ஸ்தலஸ்தாபனம் முதன் முறையாக நடவடிக்கை எடுத்துள்ளது.

407 கிராமச் சங்கங்களும், 44 பட்டினசபைகளும், 33 நகரசபைகளும், 7 மாநகரசபைகளும் இக்கணக்கெடுப்பில் கலந்து கொள்ளும்.

இவ்விதக் கணக்கெடுப்பு உள்ளூரிலுள்ள வேலைகளைத் திட்டமிட்டு செயல்படுத்த உதவும் என ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு. டி. வி. மகாதந்திலா தெரிவித்தார்.

மேற்படி இலாகாவின் கணக்கெடுப்பாளர் திரு. உப்பாலி கொடமுன தயாரித்துள்ள நீண்ட கேள்விப் பட்டியலில் ஸ்தலஸ்தாபனங்களின் நிதி நிலைமை, செலவு, நிதிசேர்க்கப் பட்டவிதம் போன்ற கேள்விகள் அடங்கியுள்ளன. இதற்கான பதில்கள் ஸ்தலஸ்தாபன இயக்கங்களின் 1960-ம் ஆண்டுக்கான விரிவான கணக்கை விளக்குமெனத் தெரிகிறது.

ஐயாறன் எழுதுவது

சென்ற ஞாயிறு முதல் பஞ்சாங்கப்படி அக்கினி நாள் ஆரம்பம். மேமாதம் 28-ந் திகதி வரை இது நீடிக்கிறதாம். சாதாரணமாகவே வெயில் தாங்கமுடியாது. அதுவும் அக்கினி நாளென்றால் எப்படித் தாங்குவது என்று கவலையாக இருந்தது.

நல்லவேளையாக முந்தநாள் இரவு வருணன்வந்து சக்கை போடு போட்டு, பூமியைக் குளிரவைத்தான். கடுங்கோடையிலே வந்த இந்தமழையை, மரம் செடிகளைப்போல் நானும் வரவேற்றேன். அக்கினி நாட்கள் நான் கவலைப்பட்டபடி அவ்வளவு மோசமாக இல்லை.

காளியம்மனுக்கு குளிர்ச்சி அபிஷேகம் செய்ததின் பலன் தான் இது என்கிறார் ஓர் அன்பர். காரணம் எதுவாயிருப்பினும், வருணன் அடிக்கடி இப்படி வந்து நம்மை "விசிட்" செய்வது மிக நல்லதாகும்.

* * *

இலங்கைக்கு முதல் முதலாக வந்துள்ள அமெரிக்க பெண் ஸ்தானீகரான மிஸ் பிரான்லிஸ் வில்லிஸை வரவேற்கின்றேன்.

மிஸ் வில்லிஸுக்கு வயது 62. விவாகமே செய்துகொள்ளவில்லை. அமெரிக்க சர்வகலாசாலையில் அரசியல் சாஸ்திரத்துக்கு உதவிப் பேராசிரியராக இருந்தவர். பின்னர் 1927-ல் அமெரிக்க வெளிநாட்டு சேவையில் சேர்ந்தார்

இலங்கைக்கு வருமுன் நார்வேயில் ஸ்தானிகராகக் கடமை பார்த்தார். பிரிட்டன், ஸ்விட்ஸர்லாந்து இவ்விடங்களில் தொண்டாற்றினர்.

இலங்கையிலே முதல் பெண் ஸ்தானீகராக நியமிக்கப்படும் மிஸ் வில்லிஸ், இரு நாடுகளின் நட்பை பலப்படுத்துவதுடன், சிறப்பாக இலங்கை பெண்களின் அன்பையும் ஆதரவையும் அமோகமாகப் பெறுவாரென்றே கொள்ளலாம்.

* * *

ஒரு பெண்ணை, பிரதமராகக் கொண்ட ஒரு நாட்டுக்கு, ஒரு பெண்ணையே ஸ்தானீகராக அமெரிக்க ஜனாதிபதி அனுப்பிவைத்தது மிகவும் பொருத்தம். இதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். இதைப் பின்பற்றி, ரஷ்யா முதலிய வேறுபல நாடுகளும் பெண்களையே இங்கு ஸ்தானீகர்களாக அனுப்பிவைக்கலாம்.

இந்தியாவின் சார்பாக ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டும், பாகிஸ்தான் சார்பாக பீகம் லியாகத் அலிகானும், ஐரோப்பாவில் ஸ்தானீகர்களாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து, வெளிநாடுகளுக்கு ஸ்தானீகராக அனுப்பத்தக்க பெண்மணி இங்கு கிடையாதா? திறமை வாய்ந்த படித்த பெண்கள் பலர் உண்டு. சந்தர்ப்பம் அளித்தால் அவர்களும் வெற்றிகரமாக இவ்வித பதவிகளில் தொண்டாற்றலாம்.

* * *

தஞ்சாவூர் சரஸ்வதிமகால் புத்தகசாலையின் புதிய சஞ்சிகையொன்று நேற்று கிடைத்தது. தஞ்சாவூர் அரண்மனையின்பழையதஸ்தாவேஜுகளில் "கண்டி (சிங்களம்) தேசத்திய இராணி பரலோகமடைந்ததற்கு, மயான சடங்குக்கு ரு 1500 கொடுக்கப்பட்டது" என்று அதில் குறிப்பிட்டுள்ளதைப் பார்த்தேன்.

தஞ்சாவூர் அரண்மனைக்கும் கண்டி அரசகுடும்பத்துக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு அக்காலத்தில் இருந்துள்ளதை இது காட்டியது.

திருமண அழைப்பு

சந்திரகாந்திலிங்கம்
கமலாதேவி

அன்புடையீர்!

வல்வை வர்த்தகர் திரு. வே. வி. மகாலிங்கம் அவர்களின் மகன் செல்வன் சந்திரகாந்திலிங்கம் (ஆசிரியர் சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை) அவர்கட்கும், கொலநாவை அரசாங்கத்தொழிற்சாலையில் கடமையாற்றும் திரு.செ.பொன்னுத்துரை அவர்களது சிரேஷ்ட புத்திரி, செல்வி கமலாதேவிக்கும் சித்திரைத் திங்கள் 30-ம் நாள் (12-5-61) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் வரும் சுப முகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து ஆசீர்வதித் தேகுமாறு அன்புடன்வேண்டிக்கொள்ளுகிறோம்.

தங்கள் நல்வரைவை நாடும்

வே. வி. மகாலிங்கமும்
பாரியாரும்
அட்வகேட் இல்லம்,
வல்வெட்டித்துறை.

செ. பொன்னுதுரையும்
பாரியாரும்
முதிரைக்கட்டை இல்லம்,
வல்வெட்டித்துறை.

Advt-131

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

வைத்தியர் பரமேஸ்வரானந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.

தேவை

எங்கள் இன்சினியரிங் சங்கத்திற்கு அங்கத்தவர்கள் சேர்ப்பதற்கு ஆண், பெண் கன்வசர்கள் தேவை. மாதச் சம்பளமும் கொமிஷனும் கொடுக்கப்படும். தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும். கைத்தொழில் பொறியியல் சங்கம், 14, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.

Advt-133

விற்பனைக்கு

வெக்ஸ் ஹால் (Vaux hall) வைவன் EY 5958 கல்ல நிலையில் இருக்கிறது. விலை ரூ. 2500 அல்லது சிறிய காருக்குப்பதில் மாற்றிக் கொள்வது பற்றி ஆலோசிக்கப்படும். விபரங்களுக்கு மானிப்பாய் தபாற் கந்தோருக்கு அருகில் விண்ணப்பிக்கவும்.

Advt-132

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

புதன் 10-5-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரைஇசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள், பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, மாலை 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கோட்டுவாத்தியம், இரவு 7-00 நேயர்விருப்பம், 8-00 எம். வர்ணகுலசிங்கம் பாட்டு. 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 கானமஞ்சரி.

லாவோஸ் சண்டை நிறுத்த உடன்பாடு மீறிவிட்டதாக இருதரப்பாரும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

வியன்டியன், மே 9

லாவோஸில் சண்டை நிறுத்தத்தை மேற்பார்வை செய்வதற்கான சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனின் முதல் கோஷ்டி நேற்று மாலை லாவோஸ் தலைநகரான வியன்டியனுக்கு வந்து சேர்ந்தது. இந்தக் கோஷ்டியில் கமிஷன் தலைவர் திரு. சென்னும் கமிஷனின் அங்கத்துவ நாடுகளான கனடா, போலந்து ஆகிய நாடுகளின் உறுப்பினர்களும் வந்து சேர்ந்தனர்.

கமிஷன் அதிகாரிகளையும் இராணுவ அதிகாரிகளையும் கொண்ட மற்றொரு கோஷ்டி வியன்லுவாங் என்ற இடத்துக்குப் போய்ச் சேர்ந்துள்ளன.

வியன்டியன் போய்ச் சேர்ந்ததும் லாவோஸில் சண்டை நிறுத்தம் ஏற்பட கமிஷனுடன் இருதரப்பினரும் ஒத்துழைப்பார்களென்று கமிஷன் தலைவர் திரு. சென் நம்பிக்கை தெரிவித்தார்.

லாவோஸின் வலதுசாரிப் பிரதிநிதிகளும் இடதுசாரிப் பிரதிநிதிகளும் சண்டை நிறுத்தம் சம்பந்தமாக இரண்டு தினங்களாகச் சந்தித்துப் பேசினார்களென்றாலும் எந்த இடத்தில் கூடி சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என்பதுபற்றி அபிப்பிராய பேதம் எழுந்ததால் ஒரு முடிவும் ஏற்படவில்லை.

சண்டை நிறுத்த உடன்பாட்டை மீறிவிட்டதாக இருதரப்பினரும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டனர்.

லாவோஸ் சம்பந்தமான 1954-ம் ஆண்டின் சர்வதேசக் கமிஷனின் 14 நாடுகளின் மகாநாட்டை இம்மாதம் 12ந் திகதி வெள்ளிக்கிழமை ஜெனிவாவில் கூட்டுவதற்கான ஏற்பாடுகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. இந்த மகாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கலந்துகொள்ளுகின்றன.

வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளின் கூட்டமொன்று சமீபத்தில் கூடியது. இந்த மகாநாட்டில் பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம் பிரபு, அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன்றஸ்க், பிரெஞ்ச வெளிவிவகார மந்திரி ஆகியோர் கலந்துகொண்டனர். வெள்ளிக்கிழமை ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் லாவோஸ் சம்பந்தமான சர்வதேசக் கமிஷனின் மகாநாட்டில் கலந்து கொள்வதென்றும் அந்த மகாநாட்டில் எந்தவிதமான கொள்கை நிலையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் வெளிவிவகார மந்திரிகள் முடிவு செய்துகொண்டதாகத் தெரிகிறது.

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுசீனத் தூதுகோஷ்டியொன்று ஏற்கனவே ஜெனிவா போய்ச் சேர்ந்துள்ளது.

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொள்வதில்லையென்று கம்போடியப் பிரதமர் இளவரசர் நரோடம் சிகானுக் செய்துள்ள முடிவை மாற்றும்படி புதுசீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் கேட்டுள்ளார். இளவரசர் சிகானுக் இல்லாமல் லாவோஸ் சம்பந்தமாக அமைதித் தீர்வுகாண்பது முடியாத காரியம் என்று திரு. சூ-என்-லாய் கூறினார்.

லாவோஸ் நிலைமைக்குப் பரிகாரம் காண்பதற்கு லாவோஸ் சம்பந்தமான 1954-ம் வருடத்திய 14 நாடுகளைக்கொண்ட சர்வதேசக் கமிஷனின் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று கம்போடியப் பிரதமர் சிகானுக்தான் முதலில் யோசனை கூறினார்.

லாவோஸ் மன்னர் சவன்னவத்தனுவைச் சமீபத்தில் சந்தித்த இளவரசர் சிகானுக் தாம் ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென்றும் இது லாவோஸ் மன்னரின் விருப்பமென்றும் அறிவித்தார்.

அல்ஜீரியா

டிகால் நம்பிக்கை

பாரிஸ், மே 9

"அல்ஜீரியாவின் வருங்காலம் பற்றி அல்ஜீரியதேசியவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உருவானமுறையில் உடன்பாடு காண்போம்" என்று பிரெஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டிகால் நேற்று டெலிவிஷனில் தோன்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அல்ஜீரியாவில் தோன்றிய புரட்சியை நசுக்கியபின் நேற்றுத்தான் முதல்தடவையாக டெலிவிஷனில் தோன்றிப் பேசிய ஜனாதிபதி டிகால் அல்ஜீரியாவில் அல்ஜீரியர்களே விரைவில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்றார். அவர்கள் அதை மறுத்தால் பிரான்ஸ் அதற்கும் தடை சொல்லாது என்றார்.

கடாங்காவின் கூலிப்பட்டாளம்

நியூஸ்வில்லி சோதனைக்களம்?

லியப்போல்ட்வில்லி, மே 9

கடாங்கா படையில் கூலிக்குச் சேர்ந்துள்ள ஐரோப்பிய துருப்புக்களைப்பிடித்து நாடு கடத்தும் ஐ. நா. படைக்கு நியூஸ்வில்லி என்ற இடம் ஒரு சோதனைக்களமாக இருக்குமென்று லியப்போல்ட்வில்லியில் அபிப்பிராயம் நிலவுகிறது.

நியூஸ்வில்லியென்ற இடத்தில் கடாங்காவின் படைக்கு இரு பெல்ஜியம் அதிகாரிகள் தலைமைதாங்குகிறார்கள். இவர்கள் அங்கிருந்து செல்ல மறுத்து விட்டனர்.

ஐரோப்பியத் துருப்புகளைத் தனியாகப் பிரித்து நாடுகடத்தும் ஐ. நா. அதிகாரிகளின் முயற்சியை முறியடிக்கும் நோக்கமாக கடாங்கா படை பல்வேறு சிறுசிறு அணிகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளனவென்று கூறப்படுகிறது.

அமெரிக்கவானவெளிமனிதனுக்கு வாஷிங்டனில் வீரவரவேற்பு

வாஷிங்டன், மே 9

வானவெளிக்குச் சென்று திரும்பிய அமெரிக்க வான வெளி மனிதன் கமாண்டர் அலன் ஷெப்பேர்ட் நேற்று வாஷிங்டன் வந்து சேர்ந்த பொழுது அவருக்கு வீர வரவேற்பு அளிக்கப்பட்டது.

இலட்சக்கணக்கான மக்கள் அவரை வாஷிங்டன் விமான நிலையத்திலும், வீதிகளிலும் திரண்டு நின்று சந்தோஷ ஆரவாரஞ்செய்து வரவேற்றனர்.

வாஷிங்டன் விமான நிலையத்தில் கமாண்டர் ஷெப்பேர்ட் வந்திறங்கியபோது அவரது மனைவியும் பெற்றோரும் சகோதரியும் மகிழ்ச்சிபொங்க வரவேற்றனர். தமது மனைவியும் சகோதரியும் இரு பக்கத்திலும் வர விமானத்துறையில் கூடியிருந்த பெருந்தொகையான மக்களுக்கூடாக ஷெப்பேர்ட் வெளியேவந்தார்.

திறந்த காரில் கமாண்டர் ஷெப்பேர்ட் ஜனாதிபதியின் வாசஸ்தலமான வெள்ளை மாளிகைக்குச் சென்றார். வீதியின் இருமருங்கும் மக்கள் நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பாராட்டு உபசார வைபவத்தில் அமெரிக்காவின் வீரருக்கான தலைசிறந்த விருதை கமாண்டர் ஷெப்பேர்டுக்கு ஜனாதிபதி கென்னடி வழங்கினர்.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி கென்னடி பேசுகையில் 'வான வெளிப் பிரயாணத்தில் உலகில் அமெரிக்காவுக்கு ஏற்பட விருந்த அவமானத்தை கமாண்டர் ஷெப்பர்ட் நீக்கிவிட்டார்' என்று கூறினர்.

தமக்கு வழங்கப்பட்ட விருதுக்கும் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்த கமாண்டர் ஷெப்பேர்ட் வானவெளிப் பிரயாணத்தில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துக்கூறினர்.

"அன்னபூர்ணா" வெற்றி

ராஷ்டிரபதியின் பாராட்டு

புதுடில்லி, மே 9

இமயமலைத் தொடரிலுள்ள அன்னபூர்ணா என்ற மலையின் உச்சியை அடைந்த பாரத மலையேறும் கோஷ்டியினரை ராஷ்டிரபதி ராஜேந்திரபாபு, உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு, பாதுகாப்புமந்திரி திரு. கிருஷ்ண மேனன் ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

அன்னபூர்ணா மலைத்தொடரில் நான்கு சிகரங்கள் உள்ளன. 24,584 அடி உயரமான அன்னபூர்ணாவின் மூன்றாவது சிகரத்தை பாரத மலையேறும் கோஷ்டி 'கைப்பற்றியதுடன்' அத்தொடரில் ஏனைய சிகரம் இனி இல்லை. இதுவரை யாராலும் எட்டமுடியாதிருந்த இச் சிகரத்தை பாரத மலையேறும் கோஷ்டியின் தலைவரான பாரதக் கடற்படையைச் சேர்ந்த ஒரு லெப்டினன்டும் மற்றும் இருவரும் ஒரு ஷெர்பாவும் சென்ற சனிக்கிழமை மாலை 4-16க்கு அடைந்தார்கள்.

ஆப்கன் - பாக் ரேடியோ டெலிபோன்

புதுடில்லி, மே 9

ஆப்கானிஸ்தானுக்கும் பாரதத்துக்கும் இடையில் நேரடி ரேடியோ டெலிபோன் தொடர்பு ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆப்கன் தகவல் மந்திரியும் பாரதத் தகவல் மந்திரியும் இன்று செய்திகளைப் பரிமாறிக்கொண்டனர்.

மின்னல் தாக்கி மரணம்

முள்ளியவளை, சனி

முள்ளிவாய்க்கால் பகுதியில் விறகு சேகரித்துக்கொண்டிருந்தபோது, மின்னலால் ஐவர் தாக்குண்டதாகவும், இதில்ஒருவர் உயிரிளந்தார் எனவும், மற்றும் நால்வர் மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

புதன்கிழமை வரும் செக்: தூதுகோஷ்டி

கொழும்பு, திங்கள்

3 பேர் அடங்கிய செக் கோஸ்லோவேகிய கலாச்சார தூதுகோஷ்டி ஒன்று புதன்கிழமை இலங்கை வரும் என அறிவிக்கப்பட்டது.



பற்றறிகள்
சார்ச் செய்தும்
பழுது பார்த்தும்
உத்தரவாதத்துடன்
கொடுக்கப்படும்
முருகன் எலக்றிகல் ஸ்ரோர்ஸ்
6/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
Luden L.I.L
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி "லடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியப் பயிற்சியாளர்கள் அடைந்த ஏமாற்றம்

அலவன்ஸ் கிடைக்காது வீடு திரும்பினர்

மகாரகம, திங்கள்

விடுமுறையிலிருக்கும் 700க்கு மேற்பட்ட எஸ். எஸ். ஸி. தராதரம் பெற்ற ஆசிரியப் பயிற்சியாளர்கள் தங்கள் மாத அலவன்சைப் பெறுமுகமாக மகாரகம பயிற்சிக்கல்லூரிக்கு வந்தனர்.

சிலருக்கு மட்டும் கல்லூரிக் காரியாலயத்தில் அலவன்ஸ் பணம் வழங்கப்பட்டது. பெருந் தொகையானோர். உபதபாற் கந்தோரில் பணம் பெறுமாறு கோரப்பட்டனர். ஆனால் அங்கேயும் போதுமான பணம் இருக்கவில்லை.

திஸமாரா, மட்டக்களப்பு ஆகிய தூர இடங்களிலிருந்து வந்தவர்களும் இதனால் ஏமாற்றம் அடைந்தனர். அவர்களில் பாதிப்பேர் பெண்களாகும். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் 175 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.

—

சம்பளம் கிடைத்தது!

யாழ்ப்பாணம, செவ்வாய்

வடபகுதி உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்கள் தமது மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான சம்பளத்தையும் மார்ச் மாத சம்பள முன்பணத்தையும் கடந்த வியாழக்கிழமை பெற்றிருக்கிறார்களென அறியப்படுகிறது. கடந்த இரண்டுமாத காலமாக இவர்களுக்கு சம்பளமோ முன்பணமோ கொடுபடாதிருந்தது.

வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு இலங்கையில் தடை

கொழும்பு, செவ்வாய்

உள்ளூர் உற்பத்தி ஸ்தாபனங்களுக்கு இடையூறாக இருக்கும் வெளிநாட்டு ஸ்தாபனங்களை இங்கு ஸ்தாபிக்கவிடாது தடைசெய்வதற்கான மசோதா ஒன்றைக்கொண்டுவர அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

ஏற்கனவே இங்கு ஸ்தாபிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்தாபனங்கள் மேலும் உற்பத்தியை விருத்தி செய்யாது தடை செய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி மசோதா இந்திய தொழில் அபிவிருத்திச்சட்டத்தைப் போன்றதாக இருக்கும் எனத் தெரிகிறது.

உள்ளூர் உற்பத்தித்தொழில் சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுதலுக்கிணங்கவே இம் மசோதாவைக் கொண்டுவர அரசாங்கம் எண்ணியுள்ளதாக அறியப்படுகிறது.

விஸவபாரதியில் பட்டமளிப்பு விழா

கல்கத்தா, மே 9

கவியரசர் தாகூரின் நூற்றாண்டு விழாவையொட்டி சாந்திநிகேதனத்தின் விச்வபாரதி பல்கலைக் கழகத்தில் இன்று விசேஷ பட்டமளிப்பு விழா ஒன்று நடைபெற்றது.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், பேராசிரியர் எஸ். என். போஸ், பேராசிரியர் தேவேந்திர மோகன் போஸ், பேராசிரியர் (டாக்டர்) ஹுமாயின் கபீர் ஆகியோருக்கு 'இலக்கிய கலாநிதி' என்ற கௌரவப்பட்டங்கள் இவ்விழாவில் வழங்கப்பட்டன.

விஸ்வபாரதியின் தலைவர் என்ற முறையில் பிரதமர் நேரு இப்பட்டங்களை வழங்கினர்.

இவ்விழாவில் திரு. நேரு பேசுகையில் "ஜாதி முறை போன்ற பத்தாம்பசலி சமூக பழக்கவழக்கங்களை உடைத்தெறியவேண்டுமென்ற தாகூரின் அறைகூவலை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும்" என்றார்.

"ஜாதிமுறை போன்ற பழக்க வழக்கங்கள் சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் பாரதத்தின் ஒற்றுமைக்கும் முட்டுக்கட்டை போடுவன" என்று திரு. நேரு கூறினர்.

கவியரசர் தாகூர் போன்ற ஒரு மேதை உலகில் தோன்றுவது அரிது என்று குறிப்பிட்ட பிரதமர் நேரு, கல்வி முறை எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு அவரின் விச்வபாரதி ஒரு சான்று என்றார்.

இ. போ. சபை நிர்வாகம்

17 பகுதிகளாகப் பிரிக்கும் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவைகளைப் பல்வேறு நிர்வாகப் பகுதிகளாகப் பிரிப்பதென்று இ. போ. சபை தீர்மானித்துள்ளது. இத்தீர்மானம் ஜூலை மாதம் முதல் திகதியிலிருந்து அமுலுக்குவரும்.

இத் திட்டத்தின்படி 17 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு பகுதி மனேஜரின் பொறுப்பில் இருக்கும்.

பஸ் சேவையில் எந்தெந்த மாவட்டம் இலாபம் கொடுக்கிறதென்பதையும் எந்தெந்த மாவட்டம் நஷ்டம் தருகிறதென்பதையும் கண்டுகொள்வதற்கு உதவும் நோக்கத்துடன்தான் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதென்று பதில் தொழில் தேசியமய மந்திரி திரு. எம். பி. டி. ஸட். சிறிவர்த்தனா தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி வாகனங்களின் பராமரிப்பு, பழுது பார்த்தல், சப்பளம், தொழிலாளர் தகராறுகள் யாவும் அந்தந்தப் பிரிவே கவனித்துக் கொள்ளும்.

17 பகுதிகளின் விபரம் வருமாறு:—

இரத்மலானை: (2202 ஊழியர்)
மகாரகமை: (1556 ஊழியர்)
மீத்தோட்டமுல்ல: (1556 ஊழியர்)

கடவத்தை: (1042 ஊழியர்)
நீர்கொழும்பு: (1062 ஊழியர்)
குருநாகல்: (1138 ஊழியர்)
அநுராதபுரம்: (442 ஊழியர்)
யாழ்ப்பாணம்: (940 ஊழியர்)
பதுளை: (511 ஊழியர்)
இரத்தினபுரி: (609 ஊழியர்)
நுவரேலியா: (541 ஊழியர்)
கண்டி வடக்கு: (942 ஊழியர்)
கண்டிதெற்கு: (1183ஊழியர்)
களுத்துறை: (687 ஊழியர்)
காலி தெற்கு: (957 ஊழியர்)
மாத்தறை: (653 ஊழியர்)

—

சம்பத் கட்சிபற்றி பெரியார் கருத்து

செவ்வாய், மே 9

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து திரு. சம்பத் விலகியது பற்றிக் குறிப்பிட்டு சின்னப்பன் பட்டியில் நடைபெற்ற திராவிடர்கழக பொதுக்கூட்டத்தில் திரு. ஈ. வெ. ரா. பெரியார் பேசியதாவது:

"கண்ணீர்த்துளிக் கட்சியில் இருந்து சம்பத் விலகியதற்கு நீங்கள்தான் காரணம். உங்கள் பேச்சைக் கேட்டுத்தான் அப்படிச் செய்து விட்டார் என்று பலர் என்னைக் கேட்கிறார்கள்.

"சம்பத் விலகினான் காரணம் என்று சொல்லுவது சுத்தப் பொய். சம்பத் என் பேச்சைக் கேட்பவன் அல்ல, அவன் பொறுத்துப்பார்த்தான் புத்தி வந்ததும் விலகிவிட்டான். அவன் என் பேச்சைக் கேட்பவனாக இருந்திருந்தால் எப்போதோ கண்ணீர்த்துளிக்கட்சியிலிருந்து விலகி நல்லவனாகியிருப்பான்"

அவர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழ் தேசியக்கட்சி அமைத்திருக்கிறார்கள். அந்தக் கட்சியை நான் ஆதரிப்பேனே, மாட்டேனே என்பதை இப்போது சொல்லமுடியாது. அந்தக்கட்சி எதுவாயினும் சரியே.

"காமராஜை அந்தக்கட்சி ஆதரித்தால், நானும் அந்தக் கட்சிக்கு ஆதரவு தருவேன். காமராஜை அந்தக்கட்சி எதிர்த்தால் அந்தக்கட்சியையே ஒழிக்கஎன் பலத்தையே செலவிடுவேன்.

இப்போது உள்ள நிலையில் காமராஜைத்தவிர யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களுக்குக் கேடுதான் ஏற்படுமே தவிர, நன்மை இல்லை"

4 அரிசி ஆலைகள் நிறுவப்படும்

கொழும்பு, செவ்வாய்

பதவியா, எலஹர, தம்புள்ள, மதவாச்சி ஆகிய இடங்களில் மேலும் 4 அரிசி ஆலைகளை நிறுவுவதென விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. ஏற்கனவே மதவாச்சியில் 40,000 புசல் நெல் அரைக்கப்படுகிறதென்றும், புதிய ஆலைகளுடன் சேர்த்து ஆண்டு ஒன்றுக்கு 2,50,000 புசல் நெல் குத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமான உபமான்யப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து பேசிய மந்திரி திரு. எஸ். பி. டி. சில்வா மட்டக்களப்பு, மினிப்பே, கந்தளாய், பராக்கிரம சமுத்திரம் ஆகிய இடங்களிலும் கூட்டுறவு மூலம் அரிசி ஆலைகள் நிறுவ ஏற்பாடு செய்யப்படுமெனத் தெரிவித்தார்.

—

இலங்கையில் தாகூர் விழா கொண்டாட்டம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கைத் தாகூர் சங்கம் வருகிற 13-ம் தேதி "நாட்டிய பூஜா" நிகழ்ச்சி ஒன்று அரங்கேற்றும். கல்லூரிகளில் அகில இலங்கைக் கட்டுரைப்போட்டி நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்படும். "தாகூருக்கு அஞ்சலி" என்ற பெயரில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியமும் மொழிகளிலும் இப்போட்டி நடத்தப்படும். ஐ. நா. கல்வி, கலாச்சார ஸ்தாபனத்தின் சார்பாக கல்கத்தாவில் நடைபெறவிருக்கும் தாகூர் இலக்கிய மகாநாட்டுக்கு இலங்கை, பிரதிநிதிகளை அனுப்பும்.

—

"95 ஹஜ்யாத்திரீகர்"

கொழும்பு துறைமுகத்தில் வழியனுப்பிவைத்தனர்

இலங்கையிலிருந்து 'ஹஜ் யாத்திரை செல்லும் 95 முஸ்லிங்களை கொழும்பு துறைமுகத்தில் ஏராளமான நண்பர்களும் உறவினரும் கூடி வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த 'அன்ஷன்" கப்பலில் ஜெட்டாவுக்கு அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை!

உங்கள் காப்பியின் தரம்,
குணம், மணம்,
எந்நாளும் ஒவேதமாக அமைகிறதா?

இதோ நாங்கள் பெரும் பணச்செலவில்
தருவித்துள்ள நவீன

எலக்ரிக் ரோஸ்டர்
மூலம்

14 ருத்தலுக்குக் குறையாமலும் அதற்கு மேலும்
உங்களுக்குத் தேவையான காப்பியை வறுத்து
அரைத்து அரை மணி நேரத்தில் குணம், மணம்
நிறைந்த காப்பித்தூளைத் தருகிறோம்.

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்!

குறைந்த செலவில் குறித்த நேரத்தில்
காப்பித்தூள் தயாரிக்கப்படுகிறது!

Mohamedaley Abdulally
முகம்மது அலி அப்துல் அலி

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 515

கண் சம்பந்தமான வியாதியிலுல் கவலைப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் துயரை நீக்கி அவர்களின் நல் வாழ்த்துக்களைப் பெற்றுள்ளோம். ஒரு முறை கலந்தாலோசியுங்கள்!

மு.க.ஜகந்நாதன்

யூனி கண் வைத்தியநிபுணர்
பெரியகடை, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.